மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

வியாசரும் வியப்புறும் தருமத்தின் சொரூபமே!
அறநெறியில் வழுவாது வாழும் அறிவுச் சுரங்கமே!

அரங்கத்து எம்மானைப் பாடிய
ஆண்டாளும் அதிசயிக்கும்
பூலோக வைகுந்தமே!

இப்பாரின் பதிமூன்றாம் ஆழ்வாரே!

நாளைய தேசத்தை ஆளக் காத்திருக்கும்
பாரதத்தின் ஆள்வாரே!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே!

பணிவோடு வணங்குகிறேன்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பொன் மீது ஆசை இல்லை. பொருள் மீது ஆசை இல்லை. ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்குவதும், அவர்கள் ஏற்றம் பெற ஏணியாக எந்நாளும் உழைப்பதும்தான் என் ஆசை, என்று ஊன் உறக்கம் கருதாது, உழைக்கின்ற தாயே!

இந்த எளியவனை வணிகவரித் துறை மற்றும் பதிவுத் துறைக்கு அமைச்சராக்கியும், திருவள்ளூர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராக்கியும் வாழ்விக்கின்ற, நான் வணங்கும் அன்னைத் திருமகள் அம்மா! அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளை சமர்ப்பித்து, என் துறை சார்ந்த மானியக் கோரிக்கைக்கு பதிலுரைக்க விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பூமிப் பரப்பில் இருக்கின்ற நீர் ஆவியாக மாறி, கார் முகிலை குளிர்விக்கிறது. அந்த கார் முகிலே மறுபடியும் மழை நீராய் மண்ணுக்கே பொழிந்து, பூமியில் வாழும் உயிரினங்கள் அனைத்தையுமே மகிழ்விக்கிறது.

அதுபோலத் தான், மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப் பணம்தான் மக்கள் நலத் திட்டங்களாகி, மருத்துவம், கல்வி, சாலை மேம்பாடு என்னும் சகல வளங்களுக்கும் ஆதாரமாகிறது. அதனால்தான் வரியை விதிக்கும்போது 'கருணை காட்டு, ஆனால் அதனை வசூலிக்கும் போது கடுமை காட்டு' என்கிறது மூத்தோர் வாக்கு.

அதனை பிரதிபலிப்பதாகவே, நம் பேரறிவுத் தாயின் அரசு, வரி விதிப்பதில் கனிவும், வசூலிப்பதில் துணிவும் காட்டி வருகிறது.

ஆனால், இந்திய வரலாற்றில் இதுவரை இல்லாத புரட்சியாக, இருக்கும் வரி விகிதத்திலும் உயர்வு எதையும் செய்யாமல், புதிய வரி விதிப்பு எதுவும் இல்லாமல், ஒரு புரட்சிகர நிதிநிலையை தந்திருப்பது, நம் பேரறிவுத் தாயின் பெருமைமிகு அரசுதான்.

அதே வேளையில், அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான், தமிழகத்துக்கு பொற்காலம் படைக்கின்ற, புரட்சிக் காலம் என்பதுபோல், கலை உலகம் மீட்கப்பட்டு, கனிம வளம் காக்கப்பட்டு, மதுரையும் மீட்கப்பட்டு, மக்கள் நலமும் காக்கப்பட்டு, காவிரி முல்லைப் பெரியாறு, நீராதார உரிமைகள் மீட்டெடுக்கப்பட்டு, தமிழகம் இன்று தலை நிமிர்ந்து நடக்கிறது.

சீரழிப்பது அவர்களென்றால், சீரமைப்பது அம்மா !

அழித்தது அவர்களென்றால், அயராமல் உழைத்து ஆக்குவது அம்மா !

குடும்ப நிறுவனங்கள் எல்லாம் கொள்ளை லாபம் ஈட்டும் நிறுவனங்களாய் ஆக்கியவர்கள், தமிழகத்தை மட்டும் கடனாளி மாநிலமாய், வீழ்த்திய வேளையில், தமிழகத்தின் தவப்பயனால், நம் தாயின் பொற்கரங்களில் தமிழகத்தின் செங்கோல் அமர, இன்று அனைத்துத் துறைகளிலும் முதலிடம், என்னும் வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகிறது.

அத்தகைய பாசத் தாயின் பாதத் தடம் பார்த்து,

அம்மா அவர்கள் விழி காட்டும் திசையில்,

தாயின் விரல் பிடித்துக் கொண்டு,

பாசத் தாயின் பாதத் தடத்தில்,

வணிகம் மற்றும் பத்திரப் பதிவுத் துறையும்,

மிக பத்திரமாய் வெற்றி நடை போடுகிறது.

வரி விதிப்பு ஏதும் இல்லாத நிலையிலும், கடந்த ஆண்டைவிட, வணிக வரித் துறை மூலம் ஈட்டப்பட்டிருக்கும் வருவாய், 21.9 சதவீதம் அதிகமாக இருக்கிறது என்றால், இது எங்கள் தாயின் கைவண்ணம், எங்கள் மாதரசியின் மதிநுட்பம்.

மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே!

வரி விதிப்பது என்பது எளிது, வரி வசூலிப்பது என்பது கடினம். கடந்தகால ஆட்சியாளர்கள் வரி விதிப்பில், காட்டிய ஆர்வத்தினை, வரி வசூலிப்பதில் காட்டாத காரணத்தினால், அரசுக்கு வரவேண்டிய வரிகள், வசூல் ஆகாமல், இதன்

காரணமாக மாநிலத்தின் மொத்த உற்பத்தியுடன், வணிகவரி வரி வசூலை ஒப்பிட்டு பார்க்கும்போது, விகிதாச்சார விகிதம், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 2006-ஆம் ஆண்டு முதல் 2010–ஆம் ஆண்டு வரை, 6.18 சதவிகிதத்திலிருந்து 5.24 சதவிகிதமாக, குறைந்து இறங்கு முகமானது. ஆனால் அம்மாவின் பொற்கால ஆட்சியில், இதுவே 6.93 சதவிகிதமாக உயர்ந்துள்ளது, என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், 2012–13 ஆம் ஆண்டில், ரூ.47,885 கோடி வரி வசூல் செய்து, நாட்டிலேயே இரண்டாம் இடத்தை எய்துள்ளது.

ஆயிரம் ரூபாய் அரசு பணத்தில், ஒரு டிவி கொடுத்து மாதம் இருநூறு ரூபாய் தனது குடும்ப நிறுவனத்திற்கு, வருமானம் பார்த்தவர்கள், கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியாளர்கள், சொந்த வசூலிப்புக்கு ஆர்வம் காட்டினார்கள், அரசு வணிக வரி வசூலில், செயல்படாத தன்மைக்கு காரணமானவர்கள், அல்லவா!

ஒரு திடமான வரி வசூலமைப்புக்கு நல்ல, மற்றும் திறன்மிக்க ஆளுமையானது அவசியக் கூறாகிறது. சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, வணிகவரி ஆணையரின் தலைமையில், வரிவசூல் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

கோட்ட அளவில் பத்து இணை ஆணையர்கள், மாவட்ட அளவில் 40 நிர்வாக துணை ஆணையர்கள், நேரடி கண்காணிப்பில் 319 வரிவிதிப்பு வட்டங்கள் மாநிலத்தின் வரி வசூலுக்கு, முதுகெலும்பாக திகழ்கின்றன. சென்னையில் ஒரு இணை ஆணையர் கீழ், செயல்படும் 100 அதிக வரி செலுத்துபவர்களிடமிருந்து **(LARGE TAX PAYERS UNIT),** வணிகவரித் துறையால் வசூலிக்கப்படும் வரி, மொத்த வரியில் ஏறக்குறைய 55 சதவிகிதம்

அளவிற்கு உள்ளது. துறையின் செயல்பாடுகளை கண்காணிப்பதற்கு தணிக்கை பிரிவு ஒவ்வொரு மாவட்டம் / சரகத்திலும், ஒரு உதவி ஆணையர், மற்றும் ஒரு வணிகவரி அலுவலர் தலைமையிலும், வரி விகிதம் தொடர்பாக, வணிகப்பெருமக்களுக்கு எழும் சந்தேகங்களை, தீர்க்க வணிகவரி ஆணையர் தலைமையில், **Clarification and Advance Ruling Authority,** சென்னையில் அமைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இத்துறையில் செயல்படும் செயலாக்கப்பிரிவு (Enforcement), வரி ஏய்ப்புகளை தடுப்பதில், மிக முக்கிய பங்காற்றுகிறது. இதற்கு ஏதுவாக மாநிலம் முழுவதும், 8 செயலாக்க கோட்டங்கள், இணை ஆணையரின் தலைமையிலும், மாநிலங்களுக்கு இடையில் நடைபெறும், வரி ஏய்ப்புகளை தடுக்க, ஒரு இணை ஆணையரின் தலைமையில், இடை மாநில புலனாய்வுக்குழு (Inter State Investigation Cell), செயல்பட்டு வருகிறது.

இந்திய பொருளாதாரம் மந்தமாக இருந்தபோதிலும், செயலாக்கப் பிரிவின் கீழ் தீவிர கண்காணிப்பு (ம) செயலாக்கத்தின் காரணமாக, வரி ஏய்ப்பினை தடுத்து, வரி வருவாய் வசூல், நல்ல முன்னேற்றத்தினை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எய்துள்ளது.

மேலும் வணிகவரித்துறை, துறைரீதியான சில கொள்கை முடிவுகள் எடுப்பதற்கு, புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவும், புதியதாக துறையில்

பணிநியமனம் செய்யப்படும் அலுவலர்கள், துறையால் நிர்வகிக்கப்படும் சட்டங்களில், பயிற்சி பெற, வணிகவரி பணியாளர் பயிற்சி மையமும், பேருதவி புரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

வணிகவரித் துறையானது கீழ்வரும் 10 சட்டங்களை நிர்வகிக்கிறது.

1. தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 (1.1.2007 முதல்)
2. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956
3. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959 (31.12.2006 வரை)
4. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், 1970 (31.12.2006 வரை)
5. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
6. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
7. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
8. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவு மீதான வரிச் சட்டம், 1990
9. தமிழ்நாடு உள்ளாட்சி பரப்பிடங்களுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001
10. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச் சட்டம், 1983

மேற்குறிப்பிட்ட சட்டங்களின் வாயிலாக, கடந்தகால ஆட்சியில் **2006-2011, "ஐந்தாண்டுகளில்",** ரூ.1,17,675 கோடி, மட்டுமே வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆட்சி பொறுப்பேற்ற 2011-2012, 2012-2013, ஆகிய இரண்டே வருடங்களில், நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை கடந்து, மொத்தமாக ரூ.87,430 கோடி, வசூல் செய்து சாதனை படைத்துள்ளது என்பதனை இந்த அவையில், பதிவு செய்ய விழைகிறேன். இவ்வாண்டு (2013-2014) நிர்ணயிக்கப்பட்ட இலக்கான, ரூ.56,025.24 கோடியையும்

எளிதாக, மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான அரசு, சாதிக்கும். கடந்த ஆட்சியில் ஐந்து வருடங்களுக்கு, ரூ.1,17,675 கோடி மட்டுமே வருவாய், ஆனால் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன், முதல் இரண்டே ஆண்டுகளில் ரூ.87,430 கோடிகளும், இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான, ரூ.56,025 கோடிகளும் சேர்த்து, மூன்று ஆண்டுகளில், ரூபாய் 1,43,455 கோடிகள் வசூலாகும். இது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில் ஈட்டிய வரி வருவாயை விட, 3 ஆண்டுகளில் ரூபாய் 25,780 கோடி அதிகமாகும். இதே வளர்ச்சி விகிதத்தினை, மீதமுள்ள 2 ஆண்டுகளில் கடைப்பிடித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 5 ஆண்டுகளில், ஏறக்குறைய ரூ.2,80,000 கோடிகள் வணிகவரி வசூல் செய்து, சாதனை படைக்கும், என்று மகிழ்ச்சியோடு, அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இது கடந்த ஆட்சியைவிட, இரண்டரை மடங்கு அதிகம் ஆகும். இந்த ஆண்டின் வளர்ச்சி விகிதம், 17.62 சதவிகிதம் இருக்குமெனு, எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அம்மாவின் வழிநடத்துதலால், இந்தியாவில் வணிகவரி வருவாயில், தமிழ்நாடு முதல் இடத்தினை, அடையும் என்பதில், எள்ளளவும் ஐயமில்லை, என்ற செய்தியினை, இந்த பெருமைமிகு சபையில், பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாதரசி வழி நடந்தால், அரசுக்கு எப்போதுமே ஏறுமுகம்தான், இந்த அவைக்கு இன்னொரு செய்தியை, மகிழ்வோடு தெரிவிக்க விரும்புகிறேன். கம்பீரத்தாயின் கழக அரசு, எல்லாவற்றிலும் முதன்மைதான், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும், இல்லாத அளவில், ஏறத்தாழ 90 சதவிகிதம் இடங்களில், சட்டமன்ற

தேர்தலில் வெற்றிபெற்று, ஆட்சி அமைத்தது மட்டுமில்லாமல், உள்ளாட்சித் தேர்தலில், 86 சதவிகிதம் வெற்றியும், 10 மாநகராட்சிகளையும், இவ்வளவு ஏன் மொத்த மாநகராட்சியும், வெற்றி பெற்று, வணிகவரி வசூலில் மட்டுமல்ல, எல்லாவற்றிலும் வரலாறு படைத்து வருவது, இதய தெய்வம் புரட்சித்தலைவி, அம்மா அவர்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் இரு விரலை காட்டுவது இரட்டையிலையை, குறிப்பதோடு மட்டுமல்லாமல், தான் எப்போதும் எதையும் இரட்டிப்பாக தருபவர், என்பதை உணர்த்துவதற்காகவும்தான்.

மீன்பிடி தடைகாலத்தில், மீனவர்களுக்கு நிதிஉதவி, ரூ.1000/-லிருந்து ரூ.2000/–

முதியோர் உதவித்தொகை, ரூ.500/-லிருந்து ரூ.1000/-

வழக்கறிஞர் சேமநலநிதி, ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.5.25 இலட்சம்

ஈகை மனத்தோடு, எதையும் இரட்டிப்பாக தருகின்ற, புரட்சித்தலைவி அம்மா அவர்கள், வணிகர் நலவாரியத்திற்கு, நிறுவன இருப்பு நிதியினை (Corpus fund), ரூ.2 கோடி ரூபாயிலிருந்து, ரூ.5 கோடி ரூபாயாக உயர்த்தி, அள்ளித் தந்திருக்கிறார்.

இதன் மூலம், வணிகப் பெருமக்களுக்குத் தேவையான, மருத்துவ உதவி, குழந்தைகளுக்கான, கல்லூரிப் படிப்பு போன்றவைக்கு, கல்வி உதவித்தொகை, வழங்கப் பேருதவியாக உள்ளது. மேலும் அம்மா அவர்கள், வணிகவரித் துறையில் பதிவு பெறாத, தொழில் வரி உச்ச வரம்புக்கு கீழே உள்ள, சிறு வணிகர்களும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து, பெற்ற உரிய உரிமத்தின்

அடிப்படையில், இவ்வாரியத்தில் உறுப்பினர் ஆகலாம், என்று வழிவகை செய்தும் **29.6.2011–ல்** ஆணை பிறப்பித்துள்ளார்கள். தற்போது உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, தமிழ்நாட்டிலுள்ள சிறுவணிகர்கள், மற்றும் அவர்கள் குடும்பத்தினர், அனைவரும் அதிக அளவில் பயன்பெற, தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதற்காக துறையில் உள்ள, **319** வரிவிதிப்பு வட்டங்கள் அனைத்திலும், சிறப்பு முகாம்கள் நடத்தி, குறைந்தபட்சம் ஒரு வட்டத்திற்கு **500**-லிருந்து **1000** பேர் வரையில், உறுப்பினராக சேர்த்து, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு படிப்படியாக தமிழ்நாட்டில் உள்ள, அனைத்து சிறு மற்றும் நடுத்தர வணிகர்களை உறுப்பினராக சேர்க்க, முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இதுபோன்று சிறு வணிகர்களின் நலனில் அக்கறை கொண்ட அம்மாவின் அரசு, **2006**-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டுவரி சட்டத்தில், **63–**A என்னும் பிரிவினை ஏற்படுத்தி, விற்பனைத்தொகை வரம்பை ரூ.**1** கோடி என்று நிர்ணயம் செய்து அத்தகைய கணக்கை உறுதிசெய்ய, பட்டயக் கணக்கர் (Chartered Accountant), மற்றும் விலை மதிப்பீட்டுக் கணக்கர் (Cost Accountant) கொண்டு, தணிக்கை செய்தால் போதும் என்றும், வரிவிதிப்பு அலுவலர்களால், வரிக் கணிப்பு ஆணை (Assessment Order), கட்டாயம் பிறப்பிக்க வேண்டும், என்ற நடைமுறையை கைவிடப்படுவதற்காக, அம்மா அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தில், சில திருத்தங்கள் கொண்டுவந்தார்கள். ஆனால் எளியவர்களையும்,

வறியவர்களையும் கண்டு முதலைக்கண்ணீர் வடிக்கும், முதியவரின் கும்பல், “Wallmart” நிறுவனத்திற்கு வக்காலத்து வாங்கும் வகையில், கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. அரசு, அந்நிய பன்னாட்டு நிறுவனங்களான, வால்மார்ட் போன்றவற்றுக்கு,

முதல்நாள் ஆதரவு,

இரண்டாவது நாள் சஸ்பென்ஸ்,

மூன்றாவது நாள் சிதம்பரம், குலாம்நபி ஆசாத் செல்ல மிரட்டல்,

அது ஸ்பெக்ட்ரம் மிரட்டலாகக்கூட இருக்கலாம்!

குரங்கினமும், குலுங்கிச் சிரிக்கின்ற அளவிற்கு

அந்தர் பல்ட்டி, அடித்தவர்கள் அவர்களல்லவா!

வால்மார்ட், தமிழகத்தில் அனுமதியில்லை, என தீர்க்கமாக முடிவெடுத்து திடமாக நின்றவர், இதயதெய்வம் அம்மா அவர்கள்தான். ஆகையால்தான், வணிகபெருமக்களை காப்பது, எங்கள் காவியத்தாய்தான், என்று சிறு, குறு வணிகபெருமக்கள் போற்றுகின்றனர்.

வால்மார்ட் நிறுவனத்திற்கு, வால் பிடித்தது மட்டுமல்ல, இந்தியாவின் ஏர்செல் நிறுவனத்தை, மலேசியாவின் Maxis நிறுவனத்திற்கு, மிரட்டிக் கைமாற்றியவர்கள்தான், கடந்தகால மைனாரிட்டி திமுக ஆட்சியாளர்கள்.

2ஜி கோப்பினையும், மகனின் பதவியையும், மனைவியின் “பால்வா” தொடர்பையும், மகளின் அரசியல் உயர்வையும் மனதில் கொண்டு, மத்திய அரசினை காப்பாற்றுகிறேன், என்று சிறு வணிகர்கள் மற்றும் நடுத்தர வணிகர்கள், வாயில் /

சோற்றில், மண்ணை தெளித்தார்கள். இதனை வணிகப் பெருங்குடிமக்கள் மறக்கவில்லை, உரிய நேரத்தில் தக்க பதிலடி கொடுப்பார்கள். எந்த நாடாளுமன்றத்தின் வாயிலாக, அவர்களுக்கு அநீதி ஏற்படுத்தப்பட்டதோ, அதே நாடாளுமன்றத்திற்கு, நமது அம்மாவின் தலைமையில், **40** பேரையும் அனுப்பி நமது பாரத நாட்டை ஆளும், அங்கீகாரத்தை ஒட்டுமொத்த இந்திய, தமிழ் மக்கள் அனைவரோடும் சேர்ந்து, நமது தமிழக வணிகர்களும் அளிப்பார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள், பல்பொருள் சில்லரை வர்த்தகத்தில், அந்நிய முதலீடு குறித்து கடுமையான, மறுப்புக் கொள்கையை கொண்டுள்ளார்கள், என்பதை நமது தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். இதற்கு எடுத்துகாட்டாக சமீபத்தில் விதிகளை மீறிய ஒரு பன்னாட்டு நிறுவனத்திற்கு, ஏற்பட்ட கதியையும் அது இழுத்து மூடப்பட்டது குறித்தும், இந்த நாடே நன்கு அறியும்.

<u>GST (சரக்கு மற்றும் சேவை வரி)</u>

தற்போது, சேவைகள் மீதும், சரக்குகளின் உற்பத்தியின் மீதும், வரிவிதிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. அதே சமயம், சரக்குகளின், விற்பனை மீது வரிவிதிக்கும் அதிகாரம், மாநில அரசுகளிடம் உள்ளது. உள்ளீட்டு வரி வரவு (Input Tax Credit) பெறுவதற்கான, வசதி மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வகைப்பாட்டிற்கும் வழங்கப்பட்டுள்ளது. சரக்குகளின் உற்பத்தி, விற்பனை, மற்றும் சேவைகளின் மீது மத்திய அரசும், மாநில அரசும் இணையாக வரிவிதித்திட, சரக்கு மற்றும் சேவை வரி (Goods and Service Tax) வழிவகுக்கிறது. இதற்காக, கடந்த மார்ச் **2011–ல்**, மக்களவையில், அரசியலமைப்பு திருத்தச் சட்டமுன்வடிவு (**115–வது** சட்டத்திருத்தம்),

அறிமுகப்படுத்தப்பட்டு, நிதி சம்பந்தப்பட்ட, பாராளுமன்ற நிலைக்குழுவால், தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இந்த திருத்தச் சட்டமுன்வடிவின் சில கூறுகள், மற்றும் சரக்கு மற்றும் சேவை வரியில், உத்தேசிக்கப்பட்டுள்ள அமைப்பு தொடர்பாக, தமிழ்நாடு அரசுக்கு உள்ள சில ஆட்சேபனைகள் குறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 18.08.2011 நாளிட்ட, கடிதம் வாயிலாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு, சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக் கடிதத்தில் GST-யை அமல்படுத்தினால், தமிழ்நாடு போன்ற உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 5000 கோடி இழப்பு ஏற்படுமென, அம்மா அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆட்சேபனைகள், நிதி தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழுவிடமும், மற்றும் மத்திய நிதியமைச்சருடனான கூட்டங்கள், மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவினால் (Empowered Committee) நடத்தப்படும், தொடர் கூட்டங்களிலும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மத்திய விற்பனை வரி (Central Sales Tax) விகிதம் குறைக்கபட்டதால் ஏற்படக்கூடிய வரி இழப்பினை, மாநிலங்களுக்கு ஈடுசெய்யப்படும், என மத்திய அரசு உறுதியளித்தது. ஆனால் இதுவரை தரவில்லை, மண்ணெண்ணெயை கூடுதலாக கேட்டுத் தரவில்லை, தானே புயல்நிவாரணத்திற்கு, உதவி இல்லை, மிகுதியான மின்சாரத்தை கூட, நமக்கு கொடுக்க மனமில்லாதவர்கள், கொடுக்கவேண்டிய இழப்பீட்டு நிலுவையை கொடுக்கவில்லை. 01.04.2010 முதல் சரக்கு மற்றும் சேவை

வரி அறிமுகப்படுத்தப்படாததால், 2010-2011-ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு, தமிழகத்துக்கு தரவேண்டிய தொகையான, ரூபாய் 2,309.24 கோடியில், இதுவரை ரூபாய் 58.92 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனை பரிசீலிக்க, ஒரு கூட்டுக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழு 2010-2011-ஆம் ஆண்டிற்கு குறைப்பு, ஏதும் மேற்கொள்ளப்படாமல், 100 சதவிகித இழப்பீட்டை, மத்திய அரசு வழங்க வேண்டுமென்றும், 2011-2012 மற்றும் 2012-13 ஆகிய ஆண்டுகளுக்கான இழப்பீட்டினை 75 சதவிகிதம், மற்றும் 50 சதவிகிதம், முறையே வழங்கவேண்டுமென பரிந்துரை செய்துள்ளது. வேட்டிக்கட்டிய தமிழனென்று, டெல்லியிலே வீராப்பு பேசிக்கொண்டிருப்பவர்கள், மத்திய அரசு தரவேண்டிய நிலுவையை பெற்றுத்தரலாமே, மத்திய அரசின் கஜானா அவரிடம்தானே உள்ளது, என்ற சந்தேக கேள்வியை எழுப்பி !

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மதிப்புக்கூட்டுவரி (Value Added Tax), அறிமுகப்படுத்தியதால் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய, 2007 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளுக்கு 75 சதவிகிதம், மற்றும் 50 சதவிகிதம் முறையே, இழப்பீடு வழங்க மத்திய அரசு ஒப்புக்கொண்டது. இதன்படி ரூபாய் 4,011.80 கோடி, நமது மாநிலத்திற்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு, இதுவரை வழங்கியது போக, மீதமுள்ள தொகை ரூ.650.44 கோடி இன்னும் தமிழகத்திற்கு நிலுவையில் உள்ளது. ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! டெல்லியில் உள்ள தமிழர், அதனை தமிழகத்திற்கு வாங்கித்தரப் போகிறாரா, இல்லையா, என்பது தெரியாது. ஆனால் மத்திய

அரசிடமிருந்து, எதை எப்படி பெற வேண்டுமென்று, நன்கு அறிந்த நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், அதனை கேட்டு பெறாமல், அரியணை ஏறி, ஆணை மூலம் வழங்கக்கூடிய காலம், மிக மிக நெருங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

உயரழுத்த மின் நுகர்வோர்கள் பயன்படுத்தும், எரி உலை எண்ணெய்க்கு அளிக்கப்பட்ட வரிவிலக்கினை, 31.05.2013 வரை, மக்கள் நலன் கருதி, மாண்புமிகு அம்மா, அவர்கள் நீட்டித்து ஆணையிட்டுள்ளார்கள். மேலும் ஜென்செட்டுகள் (Genset) மீதான வரிவீதத்தை, 14.5 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைத்து மாண்புமிகு அம்மா, அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மக்கள் நலனே தமது குறிக்கோள், என்று தமது வாழ்நாளை மக்களுக்காகவே, அர்ப்பணித்து வாழ்ந்து கொண்டிருக்கும், மாண்புமிகு அம்மா அவர்கள், வீட்டு உபயோக சமையல் எரிவாயுவுக்கான வரியை, 01.07.2011 முதல் முற்றிலுமாக விலக்களித்து, ஆணையிட்டுள்ளார்கள். மேலும் இரசாயன உரங்கள், விவசாய இடுபொருட்கள் மற்றும் வேளாண் உபகரணங்கள், போன்றவற்றிற்கு 12.7.2011 முதல் முற்றிலுமாக, வரி விலக்களித்து, ஆணையிட்டுள்ளார்கள். மக்களின் அத்தியாவசிய உணவு பொருட்களான, கோதுமை, ஓட்ஸ், சர்க்கரை நோய்க்கான இன்சுலின் மருந்து, கையால் செய்யப்படும் பூட்டுக்கள், குழந்தைகளுக்கான, பாலுட்டும் பாட்டில்கள் மற்றும் இரண்டு சக்கர வாகன ஓட்டிகளுக்கான, தலைக்கவசம் ஆகியவற்றிற்கான வரிகளையும் 01.04.2012 முதலும், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும், மோட்டார் பொருத்தப்பட்ட பேட்டரியினால், இயங்கும்

ஸ்கூட்டர்களுக்கான வரியை, **14.12.2012** முதல் விலக்களித்தும், மாண்புமிகு அம்மா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

வணிகவரித்துறையின் வளர்ச்சியையும், செயல்பாட்டினையும் திறம்படுத்தும் வகையில், வர்த்தக புலனாய்வு பிரிவு (Business Intelligence Unit) என்ற பிரிவினை, துணை ஆணையரின் தலைமையில் ஏற்படுத்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் காரணமாக உள்ளீட்டுவரி (Input Tax Credit), பிற மாநிலத்திற்கு இருப்பு மாற்றம் (Stock Transfer), ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தவும் ஆணையிட்டுள்ளார்கள். மேலும் வரி வசூலை தொய்வின்றி மேற்கொள்ள, துணை வணிகவரி அலுவலர்களின் வரிவிதிப்பிற்கான, அதிகார வரம்பினை ரூபாய் **20** இலட்சத்திலிருந்து ரூபாய் **75** இலட்சமாகவும், வரித்தொகை ரூ.**30,000/–**த்திலிருந்து ரூ.**75,000/–**ஆகவும், **5.9.2011** முதல் உயர்த்தி, அம்மா அவர்களின் அரசு ஆணையிட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின், சீரிய திட்டங்கள் மூலம், துறையின் அனைத்துப் பிரிவுகளும் முடுக்கிவிடப்பட்டு, வணிகவரித்துறையின் வருவாய் பன்மடங்கு பெருகி, தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக ஆக்கும், அம்மாவின் முயற்சியில், வணிகவரித்துறையும் தன்னை அர்பணித்துக்கொள்ளும், என்று இந்த பெருமைமிகு சபையில், உளமார உறுதி கூறுகிறேன்.

மேலும் பெருகிவரும் தொழில், மற்றும் வியாபாரங்களின் அடிப்படையில், தற்போது உள்ள சோதனைச்சாவடிகள் (Checkpost), மற்றும் செயலாக்கப்பிரிவின்

(Enforcement Wing), கீழ் செயல்படும், சுற்றும் படைகளின் (Roving Squad), எண்ணிக்கையை அதிகப்படுத்தி, அதன் செயல்பாடுகளை பலப்படுத்துமாறு, மாண்புமிகு அம்மா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள். வரி ஏய்ப்புகளை கணிசமான அளவில் குறைத்து, வரிவருவாயை பெருக்குவதற்கான, வாய்ப்புகள் இதன் மூலம் உருவாகும்.

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 5 ஆண்டுகளில் 2006-2011-ல் ஒசூர் மற்றும் சேலத்தில், வணிகவரி அலுவலகங்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு, ரூ.11.35 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. விழுப்புரம் மாவட்டத்தில் அலுவலக வளாகம் கட்ட அறிவிப்பு செய்யப்பட்டு, கடந்தகால ஆட்சியில் நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை. ஆனால் மாண்புமிகு அம்மா ஆட்சி பொறுப்பேற்றவுடன், அத்திட்டத்திற்காக ரூ.2.86 கோடி ஒதுக்கீடு செய்து, ஆணை வெளியிட்டார்கள். வணிகவரித்துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, 2011-2012-ஆம் ஆண்டில், ரூ.20.15 கோடி செலவில் 34 அலுவலகங்கள் கட்டுவதற்கும், 2012-2013-ஆம் ஆண்டில், ரூ.11.18 கோடி செலவில் 16 வணிகவரி அலுவலகங்கள் கட்டுவதற்கும், துறையில் உள்ள 28 சோதனைச்சாவடிகள், மற்றும் 8 சோதனை மையங்களை பலப்படுத்த, ரூ.33.36 கோடியும், செயலாக்க பிரிவின் செயல்பாட்டினை உறுதி செய்திடும் நோக்கில், பழைய வாகனங்களை மாற்றி, புதிய 16 வாகனங்கள் வாங்குவதற்கு 2012-13-ஆம் ஆண்டில், ரூ.86.96 இலட்சம் வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், 5 ஆண்டுகளில், ரூபாய் 11.35 கோடி மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஆனால் மாண்புமிகு அம்மா அரசு பொறுப்பேற்று 2 ஆண்டுகளில் ரூபாய் 67 கோடியே 42 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

துறையை கணினிமயமாக்குவதற்கு, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க ஆட்சியில் ஐந்தாண்டுகளுக்கு (2006-2011), அங்கொன்றும் இங்கொன்றுமாக, ரூபாய் 28 கோடி மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன், வணிகவரித்துறையின், மின்ஆளுமையினை (e-Governance), அடுத்த கட்ட உயர்நிலைக்கு, எடுத்துசெல்லும் நோக்கிலும், தகவல் தொழில்நுட்பம் மூலம், மேலாண்மை தகவல் முறை அறிக்கைகளை (MIS Report), தயார் செய்யவும், பெரும்பரப்பு வலையமைப்பு (Wide Area Net Work), மற்றும் உள்வலைதளம் (Intranet), ஆகியவற்றின் துணைகொண்டு, துறையை (End to End Computeraisation), முழுவதுமாக கணினிமயமாக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 230.96 கோடி, ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள். இதற்கான பணி விரைந்து நடைபெற்று வருகிறது. ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டு, தகுதியான கணினி ஒருங்கிணைப்பாளரை (System Integrator), நியமிப்பதற்கு உரிய ஆணைகள் வெளியிடுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆவன செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இதுமட்டுமல்லாது வரிகளை நேரடியாக, இணையதளம் மூலம் வங்கிகளில் செலுத்துவதற்கு 5 வங்கிகள் மட்டுமே 2011 வரை அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களால், வணிகர்களின் நலன் மற்றும் அவர்களது பொன்னான நேரத்தை மனதில்கொண்டு, மேலும் தற்போது கூடுதலாக 21 வங்கிகளுக்கு, அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மாநிலத்தில் உள்விற்பனை செய்யும் வணிகர், வெளி மாநிலத்தில் கொள்முதல் செய்யும் வணிகரிடமிருந்து, அவருடைய விற்பனைக்கு “C” Form, மற்றும் பிற மாநிலத்திற்கு இருப்பு மாற்றம் (Stock Transfer) செய்வதற்கு தேவையான “F” Form படிவங்களை, இணையதளத்தின் மூலம் பெற, நடவடிக்கை மாண்புமிகு அம்மா அவர்களால், வணிகர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வணிகர்கள், அடிக்கடி வணிகவரி அலுவலகங்களுக்கு செல்லும், சிரமங்கள் பெருமளவில் தவிர்க்கப்பட்டுள்ளது. வணிகர்களின் மனம் குளிர்ந்தால்தான், நுகர்வோரின் சுமை குறையும் என்ற இலக்கணத்தை நன்கு அறிந்த, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு செயல்பட்டுவருகிறது. ஆனால் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு உள்ளூர் விற்பனையாளர்கள் மனதையும் வேதனைப்படுத்தி, நுகர்வோரின் மனத்தினையும் வேதனைக்கு உள்ளாகி வந்தது. தன் குடும்பத்தினருக்கும், தன் நண்பர்களுக்கும் என்ன வருமானம் வருகிறது, என்ற ஒரே நோக்கத்தோடு மட்டும்தான் செயல்பட்டு வந்ததை ஒப்பிட்டுபார்க்கும் போது, மாண்புமிகு அம்மா அவர்கள் மலை, மற்றவர்கள் மடுவுக்கும் கீழே, உள்ள குழி என்பது தெள்ளத்தெளிவாக, சபையோருக்கும் பொதுமக்களுக்கும் விளங்கும், என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

**2011-2012**-ஆம் ஆண்டில் துறையில் காலியாக இருந்த, **1,325** பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலமாக, நிரப்ப நடவடிக்கை மேற்கொணடு, இதுவரை **778** பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், **1,772** பணியிடங்கள், பதவி உயர்வு மூலமாக நிரப்பப்பட்டுள்ளது. இதனில் பல பணியிடங்களில் தேவையான தகுதி பெற்றவர்கள், இல்லை என்பதால் மாண்புமிகு அம்மா அவர்கள் பதவி உயர்வுபெற, தேவையான தகுதிகளிலிருந்து விலக்களித்து, அலுவலர்கள் பதவி உயர்வுபெற, கருணையுடன் பரிசீலனை செய்து ஆணை வெளியிட்டார்கள். மேலும் காலியாக உள்ள இணை ஆணையர், அவர்கள் நிலையில் நிரப்பக்கூடிய, அனைத்து கீழ்நிலை பணியிடங்களை உடனடியாக நிரப்ப, நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, இணை ஆணையர் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் (TNPSC), நிரப்பப்படும் பணியிடங்களுக்கு உடனடியாக, பதவி இடங்களை நிரப்ப ஆவன செய்யுமாறு, தேர்வாணையத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு அம்மாவின் சீரிய திட்டங்கள் மூலம், துறையின் அனைத்து பிரிவுகளும் முடுக்கிவிடப்பட்டு, வணிகவரித்துறையின் வருவாய் பன்மடங்கு பெருகி, தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக ஆக்கும், அம்மாவின் முயற்சியில் வணிகவரித்துறை, தன்னை அர்பணித்துக்கொள்ளும், என்று இந்த பெருமைமிகு சபையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தலைவர் மற்றும் தலைமை பண்புகளை, பற்றி ஒரு சில கருத்துகளை இப் பேரவையில் பதிவுசெய்ய விழைகிறேன்.

John C. Maxwell என்ற அறிஞர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**"A leader is one who knows the way, goes the way, and shows the way."**

என்ற கூற்றிற்கிணங்க, தலைவர் என்பவருக்கு வெற்றியின் பாதை தெரியும், அந்த வெற்றிப்பாதையில் மட்டுமே செல்வார்கள், அந்த வெற்றியின் பாதையை நாட்டு மக்களுக்கும் அடையாளம் காட்டுவார்கள்.

அதே போல Steve Jobs என்ற அறிஞர் குறிப்பிடுகிறார்.

**"Innovation distinguishes between a leader and a follower."**

**AMMA, You are a Innovater, so you are a leader, and we are all followers.**

அதுபோலவே Warren Bennis என்ற அறிஞர் இவ்வாறு குறிப்பிடுவதுபோல.

**"Leadership is the Capacity to translate vision into reality."**

என்ற கூற்றிற்கிணங்க, Vision 2023 என்ற ஆவணத்தை கடந்த ஆண்டு வெளியிட்டு, அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டதுபோல, ஆட்சியின் மூலம் செயல்படுத்திக்கொண்டிருக்கும், வெற்றி தலைவி அம்மா நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அதே போல, அம்மாவின் Vision into reality, என்பதை உறுதிபடுத்தும் விதமாக, இந்த கூட்டத்தொடரிலே, 34–வது மானியக் கோரிக்கை, இந்த அவையிலே நிறைவுற்றுள்ளது. அனைத்து துறைகளிலும் சூரிய ஒளி மின் திட்டத்திற்கான அறிவிப்புகளை அளித்துள்ளார்கள் என்பதனை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**<u>பதிவுத்துறை</u>**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நில அபகரிப்பாளர்களின் கூடாரமாகவும், கூட்டு நிறுவனமாகவும் விளங்கிய மைனாரிட்டி திமுக அரசால், பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த பதிவுத்துறை, இன்று மாண்புமிகு அம்மா அவர்கள், ஆட்சி பொறுப்பேற்றவுடன் தெளிந்த நீரோடையாக, 100% Transparent துறையாக மாறியிருக்கிறது. அம்மா அவர்களின் ஆட்சியில், பினாமி சொத்து பதிவுகள், மற்றும் போலி பதிவுகள் கிடையாது. பதிவுத்துறையின் பதிவேடுகள், வெளிப்படை தன்மையுடன் (Transparent) பராமரிக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சென்னையை தலைமையிடமாக கொண்டு, பதிவுத்துறை தலைவர் செயல்படுகிறார். அவரின் கீழ் தலைமையகத்தில், 4 கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் பதவியிடங்களிலும், 9 பதிவு மண்டலங்கள், துணை பதிவுத்துறை தலைவரின் செயல்பாட்டின் கீழும், துணை பதிவுத்துறை தலைவர்களுக்கு உதவியாக, உதவி பதிவுத்துறை தலைவர் தலைமையில், சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி, ஆகிய இடங்களில் 4 வட்டார அலுவலகங்களும் செயல்படுகிறது. மொத்தமுள்ள 50 பதிவு மாவட்டங்களில், அதிக பணிச்சுமையுள்ள 13 மாவட்டங்கள், உதவி பதிவுத்துறை தலைவர் நிலையிலும், எஞ்சியுள்ள 37 பதிவு மாவட்டங்கள், மாவட்ட பதிவாளர் தலைமையிலும், தணிக்கை செய்வதற்கு ஏதுவாக, 45 தணிக்கை அலகுகள், மாவட்ட பதிவாளரின் தலைமையிலும், துணை

பதிவுத்துறைத் தலைவர் தலைமையில், பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க, ஒரு பயிற்சி நிலையமும் செயல்பட்டுவருகிறது. மேலும், மாநிலம் முழுவதும் 578 சார்பதிவாளர் அலுவலகங்களும், இதனுள் நாமக்கல் பதிவு மாவட்டத்தில் கொல்லிமலை, சேலம் (மேற்கு) பதிவு மாவட்டத்தில் கொளத்தூர், மற்றும் பாளைங்கோட்டை பதிவு மாவட்டத்தில் படுக்கப்பத்து, ஆகிய 3 முகாம் பதிவு அலுவலகங்கள் (Camp Office), புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டு செயல்பட்டுவருகிறது. சொத்தின் மதிப்பினை நிர்ணயிப்பதில் எழும் கருத்துவேறுபாடுகளை ஆராய்ந்து சொத்தின் சரியான மதிப்பினை நிர்ணயிக்க, இரண்டு மாவட்ட வருவாய் அலுவலர்கள், சென்னை மற்றும் கோயம்புத்தூரிலும், ஒன்பது தனித்துணை ஆட்சியர்கள் திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றனர். சில பதிவுகளில் கட்டடம் தொடர்பான விவரங்களை மறைப்பதை தடுக்க, புலனாய்வு பிரிவு ஒன்றும் செயல்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பதிவுத்துறை கீழ்வரும் சட்டங்களை முழுமையாக நிர்வாகிக்கிறது. மேலும் 9 சட்டங்கள் பகுதியாக நிர்வகிக்கப்படுகிறது.

(1) 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)

(2) 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 16/1908)

(3) 1972ஆம் ஆண்டு தமிழ் நாடு வணிகம் அல்லாத நிறுமங்கள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 16/1972)

(4) 1975ஆம் ஆண்டு தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 27/1975)

(5) 1982ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)

<u>பகுதியாக நிர்வகிக்கும் சட்டங்கள்</u>

(1) 1872ஆம் ஆண்டு இந்திய கிறித்துவ திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 15/1872)

(2) 1886ஆம் ஆண்டு பிறப்பு இறப்பு மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம் (மத்திய சட்டம் 6/1886)

(3) 1932ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டம் (மத்திய சட்டம் 2/1932)

(4) 1932ஆம் ஆண்டு இந்திய கூட்டுப் பங்காண்மைச் சட்டம் (மத்திய சட்டம் 9/1932)

(5) 1954ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 43/1954)

(6) 1955ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டம் (மத்திய சட்டம் 25/1955)

(7) 1961ஆம் ஆண்டு வரதட்சணைத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 28/1961)

(8) 1969ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புச் சட்டம் (மத்திய சட்டம் 18/1969)

(9) 2009ஆம் ஆண்டு தமிழ் நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 21/2009)

பதிவுத்துறையில், அதிக அளவில் சட்டங்கள் நிர்வகிக்கப்படுவதால், அதில் பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பது, மிகவும் அவசியமாகிறது. மேலும் துறையின் அன்றாட செயல்பாட்டில், தகவல் தொழில்நுட்ப பயன்பாடு, பெருமளவில் உள்ளது. எனவே துறையின் அலுவலர்களுக்கு, உரிய அறிமுக பயிற்சி (ம) பணியிடைப் பயிற்சி வழங்குவதற்கு துறையின், பயிற்சி மையம் ஒன்று 1996 முதல் செயல்பட்டு வருகிறது. கணினி பயிற்சி அளிப்பதற்காக, பயிற்சி மையத்தில் ஒரு கணினி மையம் அமைக்க ரூ.9.70 இலட்சமும், பயிற்சி மைய வளாகத்தின் உள்ளேயே தங்கும் விடுதிகள்,

கட்டுவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ. 49.00 இலட்சமும், ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள், என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பதிவுத்துறை, 2012–2013 ஆம் நிதியாண்டில், 26,90,351 ஆவணங்களை, பதிவு செய்து, மொத்தம் 7455.41 கோடி ரூபாய் வசூல் செய்துள்ளது. இந்த ஆண்டு ஆவணங்கள் பதிவு குறைந்தபோதிலும், வருவாய் 12.6 சதவிகிதம் அளவிற்கு சீரான முன்னேற்றம் அடைந்துள்ளது.

ஒரு ஆவணம் பதிவு செய்யும்போது, சொத்தின் சந்தை மதிப்பு மீது, முத்திரைத் தீர்வை 5 சதவிகிதமும், மிகு வரி 2 சதவிகிதம், மற்றும் பதிவுக் கட்டணம் 1 சதவிகிதமும், பதிவுத் துறையால் வசூலிக்கப்படுகின்றது. இந்த 2 சதவிகித மிகு வரி, சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றத்தின், சார்பாக வசூலிக்கப்படுகிறது. இதனில் வசூலிப்பு கட்டணமாக 3 சதவிகிதம், துறையால் இருத்திக் கொள்ளப்பட்டு, எஞ்சிய 97 சதவிகிதம், சம்மந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு, மாற்றப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2003 ஆம் ஆண்டு முத்திரைத் தீர்வை, நகர்ப்புறங்களுக்கு 8 சதவிகிதம், மற்றும் கிராமப்புற பகுதிகளுக்கு 7 சதவிகிதம், என்று இருந்தததை 6 சதவிகிதமாக குறைத்து ஆணையிட்டார்கள். மேலும் மிகுவரி 5 சதவிகிதத்திலிருந்து, 2 சதவிகிதமாக, குறைக்கப்பட்டது.

மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு பொறுப்பேற்றதும், 1.4.2012ல் இருந்து முத்திரைத் தீர்வை, 6 சதவிகிதத்திலிருந்து, 5 சதவிகிதமாக

குறைக்கப்பட்டது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின்போது, 2007 ஆம் ஆண்டு வழிகாட்டி மதிப்பு திருத்தியமைக்கப்பட்டது. ஆனால் முத்திரைத் தீர்வையில், எந்தவித சலுகையும் அளிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பதிவுத்துறை, மாநிலத்தில் இலக்கியம், அறிவியல், சமயம், அறக்கட்டளை மற்றும் இதர வகையிலான சங்கங்களை, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்கிறது. மாநிலத்தில் சீட்டு நிறுவனங்களை (ம) சீட்டுக் குழுக்களின் செயல்பாடுகளை, சீட்டு நிதிகளின், சட்டத்தின் கீழ் பதிவு செய்து அதன் செயல்பாடுகளை, தொடர்ச்சியாக கண்காணிக்கிறது. மேலும், கூட்டுப்பங்காண்மை நிறுவனங்களை, கூட்டுப்பங்காண்மை சட்டத்தின்படி, பதிவு செய்வதற்கும் திருமணங்களை, தமிழ்நாடு திருமணங்கள் பதிவுச் சட்டம், இந்து திருமண சட்டம், சிறப்பு திருமண சட்டம் (ம) இந்திய கிருத்துவ திருமண சட்டத்தின் கீழும், பதிவு செய்ய துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கடந்த ஆட்சியின்போது, (2006–2011) ஐந்து ஆண்டுகளில், 50 சார்பதிவாளர் அலுவலகங்கள், மற்றும் 6 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள், மட்டுமே ரூ.15.95 கோடியில் கட்டியுள்ளனர். ஆனால் 2011ஆம் ஆண்டில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா, அவர்களின் அரசு பொறுப்பேற்ற போது பதிவுத் துறையின் பெரும்பாலான, சார்பதிவாளர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகங்கள், தனியார் / பாழடைந்த கட்டடங்களில் இயங்கி வந்தன. மாண்புமிகு

அம்மா அவர்கள், பொது மக்களின் நலன் (ம) பணியாளர்களின், நலன் கருதி 5 ஆண்டுகளில், அனைத்து பதிவுத் துறை அலுவலகங்களுக்கும், புதிய கட்டடங்கள் கட்ட ஆணையிட்டு, அதற்காக 2011–12ஆம் ஆண்டில், 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு, ரூ.26 கோடியும், 2012–13ஆம் ஆண்டில், 17 ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகங்கள் (29 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கி), மற்றும் தனியாக 48 சார்பதிவாளர் அலுவலகங்கள், ஆகியவை கட்ட, ரூ.48.90 கோடியும் ஒதுக்கீடு செய்து, ஆணை பிறப்பித்துள்ளார்கள். புதியதாக கட்டப்படவுள்ள அனைத்து கட்டிடங்களும், பொது மக்கள் காத்திருக்கும் இடம், தேவையான கழிப்பறை வசதி, மாற்றுத் திறனாளிகளுக்கான, சாய்வு தளம், ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக, இருக்க வேண்டும், என்று மாண்புமிகு அம்மா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள். மேலும் புதிய கட்டடங்களில், அம்மாவின் “தமிழ்நாடு சூரிய சக்திக் கொள்கையின்படி, புதிய கட்டடங்களில் மேல் தளத்தில், சூரிய சக்தி தயாரிக்கும் இயந்திரங்களை பொருத்த, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பழைய கட்டடங்களில், படிப்படியாக சூரிய சக்தி (Solar Rooftop systems) இயந்திரங்களை நிறுவுவதற்கும், திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், ஆண்டுக்கு, ரூ.2.99 கோடி மின்சாரக் கட்டணமாக, செலவிடப்படும் தொகை, கணிசமாகக் குறையும், என எதிர்ப்பார்க்கப்படுகிறது. சார்பதிவாளர் அலுவலகங்களில், நடவடிக்கைகள் வெளிப்படையாக அமையும் பொருட்டு, அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும், கண்காணிப்பு கேமரா நிறுவுவதற்கு மூலதன செலவாக ரூபாய் 3.47 கோடியும், தொடர் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு,

ரூபாய் 9.31 கோடியும், அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்கள். துறையின் பணியாளர்களின், பற்றாக்குறையை கருதி, உதவியாளர் பணியிடத்தினை, நேரடியாக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம், நியமனம் செய்ய அம்மா அவர்கள், அனுமதி அளித்திருந்தார்கள். அம்மாவின் ஆணைப்படி, கடந்த 2 ஆண்டுகளில், 7 மாவட்ட பதிவாளர்கள், 52 சார்பதிவாளர்கள், 306 உதவியாளர்கள், 118 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 40 தட்டச்சர்கள் தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம், நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று, துறையில் 10 ஆண்டுகள் முதல் 22 ஆண்டுகள் வரை, தற்காலிகமாக பணிபுரிந்துவந்த 172 மசால்ஜிகளின் பணியை, இரவுக் காவலர் பணியிடத்தில் வரன்முறை செய்து, அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நமது பதிவுத்துறை, தற்போது 1899–ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899)–னை பின்பற்றி, முத்திரை தீர்வை வசூலித்து வருகின்றது. இந்தச் சட்டம், இந்திய அரசால் நிர்வகிக்கப்பட்டு வருவதால், மேற்சொன்ன சட்டத்திற்கான திருத்தங்களை, நமது மாநிலத்திற்கு ஏற்ப செய்யும் நிகழ்வுகளில், அவற்றை மாநில சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டவுடன், குடியரசுத் தலைவரின், இசைவினைப் பெறும் பொருட்டு, இந்திய அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளது. பல சமயங்களில், பொது மக்கள் நலன் கருதியோ / மாநிலத்தின் நிதியினைக் கருத்திற் கொண்டோ, செய்யப்படும் திருத்தங்கள், இந்த விரிவான

நடைமுறையினால், அவற்றை செயல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், கேரளா, கர்நாடகா போன்ற பிற மாநிலங்கள், இந்த இடர்ப்பாட்டைக் களைய, தங்களது மாநிலத்திற்கென தனியாக முத்திரைச் சட்டங்களை இயற்றியுள்ளன.

மேற்கூறப்பட்ட இடர்ப்பாடுகளைக் களைய, தமிழ் நாட்டிற்கென சொந்தமாக, முத்திரைச் சட்டம் இயற்றப்படும் என, கடந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதற்கேற்ப, விரிவான பரிசீலனைக்குப் பின், வரைவு சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டு, சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்த, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மேலும், மோசடியான பரிமாற்றங்களைத் தடுக்க, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது:

(1) பதிவுச் சட்டத்தின் பிரிவு 17ன் படி, பொது அதிகார ஆவணம், விற்பனை ஒப்பந்தம், மற்றும் மூல உரிமை ஆவண ஒப்படைப்பு தொடர்பான ஒப்பந்தம், ஆகியவற்றின் பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(2) பொது அதிகார ஆவணம், சொத்தின் எல்லை, அல்லது அதனை எழுதிக் கொடுப்பவரின் இருப்பிடம், உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் மட்டுமே பதிவு, செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(3) பொது அதிகார ஆவணத்தில், முகவராக நியமிக்கப்படுபவர் மற்றும், அடையாளம் காட்டும் சாட்சிகள், ஆகியோரின் புகைப்படம் ஒட்டுவது, மற்றும் பொது அதிகாரம் பெறும் முகவரும், கையொப்பமிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(4) பொது அதிகார ஆவணத்தை எழுதிக் கொடுத்தவர், உயிரோடிருந்தால் மட்டுமே அந்த ஆவணம் செல்லுபடியாகும். எனவே, பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில், சொத்து மாற்றம் தொடர்பான ஆவணம், பதிவு செய்யப்படும் போது, அதனை எழுதிக் கொடுத்தவர், உயிருடன் இருப்பதாக தக்க அதிகாரம் பெற்றவரிடமிருந்து வழங்கப்படும், சான்றிதழைத் தாக்கல் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(5) ஒரு ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர், அது தொடர்பான சொத்தின் மீது சரியான உரிமையைப் பெற்றுள்ளாரா, என்பது குறித்து மூல ஆவணம், அல்லது பட்டா அல்லது சொத்து வரி, ரசீதுகள் ஆகியவற்றைப் பதிவு அலுவலர்கள், பரிசோதித்துப் பார்க்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

(6) பொது அதிகார ஆவணத்தைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, இதன் மீதான பதிவுக் கட்டணம் ரூ.50 லிருந்து, சாதாரண நிகழ்வுகளில் ரூ.10,000 ஆகவும், குடும்ப உறுப்பினர்களுக்கு எழுதிக் கொடுக்கும் போது ரூ.1,000 எனவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

முந்தைய ஆட்சி காலத்தில், பொது அதிகார ஆவணங்கள், கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என்ற, சட்டமில்லாத காரணத்தினால், பல நேர்வுகளில், ஏதும்

அறியா பொதுமக்களை ஏமாற்றி, ஒரே சொத்தினை பலருக்கு விற்றும், மீண்டும் மீண்டும் கடன் வாங்கும் பழக்கமும், இருந்து வந்தது. இத்தகைய மோசடியான பறிமாற்றங்கள் தடுக்கப்பட்டு, சொத்து தொடர்பான ஏமாற்று வேலைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மதகுகளை அடைத்தும், ஏரிகளை மடக்கியும், செம்மண்ணை கடத்தியும், பொது சொத்தினை கபளீகரம் செய்து, கல்லூரி கட்டியவர்களும், அண்டை வீட்டுக்காரரின் சொத்தை, அபகரித்த கடந்தகால அதிகாரவர்க்கத்தினர், கலங்கி நிற்கிறார்கள். சாதாரண பொதுமக்கள் மனமகிழ்வோடு இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

சொத்துப் பரிமாற்றங்களின் போது, முத்திரைத் தீர்வை ஆவணத்தில் கண்டுள்ள சொத்தின், சந்தை மதிப்பின் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும். சொத்துக்களின் சந்தை மதிப்பு குறித்து, பதிவு அலுவலர்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, பதிவுத் துறையால் வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள், கிராமவாரியாகத் தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு தயாரிக்கப்படும், வழிகாட்டி மதிப்புகள், சந்தை மதிப்பைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்பதில், அரசு அதிக கவனம் செலுத்துகின்றது.

வழிகாட்டி மதிப்புகளைத் தயாரிப்பதற்கான, வழிமுறைகளைத் தயாரித்துக் கொடுக்க பதிவுத் துறைத் தலைவர் தலைமையில், நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர், பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) மற்றும் தலைமைப் பொறியாளர் (நீர்ப் பாசனம்), நில நிர்வாகத் துறை இணை ஆணையர்,

நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் பிரதிநிதி, சென்னை மாநகராட்சியின் துணை ஆணையர், வருமான வரித் துறையின் பிரதிநிதி, மதிப்பீட்டாளர்கள் மையத்தின் பிரதிநிதி மற்றும் தமிழ் நாடு வணிகர் சங்கங்களின் பிரதிநிதி, ஆகியோரைக் கொண்ட மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டுக் குழுவால் வழிகாட்டி மதிப்புகளை, நிர்ணயிக்க வகுத்துக் கொடுக்கப்படும் வழிமுறைகள், அனைத்துத் தரப்பினருக்கும், ஏற்புடையதாக இருக்க வேண்டுமென்பதால், அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுடன், தனியார் சங்கங்களின் பிரதிநிதிகளும், இக்குழுவில் இடம் பெறச் செய்யப்பட்டனர்.

மதிப்பீட்டுக் குழு வகுத்த நெறிமுறைகளின்படி, வழிகாட்டி மதிப்புகளைத் தயாரிக்க, ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மதிப்பீட்டுத் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களில், மாவட்ட வருவாய் அலுவலர், மண்டல துணைப் பதிவுத் துறைத் தலைவர், சம்மந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், ஊராட்சிகளின் உதவி இயக்குநர், நகராட்சிகளின் வட்டார இயக்குநர் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

வருவாய்த் துறை, மற்றும் உள்ளாட்சி மன்றங்களின், அலுவலர்களின் உதவியுடன், சார்பதிவாளர்கள் தங்களது எல்லைக்குள் உள்ள இடங்களைப் புலஆய்வு செய்து, மதிப்பீட்டுக் குழுக்களால் வகுத்துரைக்கப்பட்ட,

நெறிமுறைகளின்படி, வழிகாட்டி மதிப்புகளின் வரைவினைத் தயாரிக்கின்றனர். இவ்வாறு தயாரிக்கப்பட்ட வரைவு, வழிகாட்டி மதிப்புகள், மாவட்ட துணை மதிப்பீட்டுக் குழுக்களால் அங்கீகரிக்கப்படுகின்றன.

அவை பொது மக்களின் பார்வைக்காக, இணையதளம் மற்றும் நாளிதழ்களில் வெளியிடப்படுவதுடன், சம்மந்தப்பட்ட சார்பதிவாளர், மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் வைக்கப்படுகின்றது. வரைவு வழிகாட்டி மதிப்புகளின் மீது ஆட்சேபணை ஏதும் பொது மக்களால் தெரிவிக்கப்பட்டால், அதனை ஆய்வு செய்து அதனடிப்படையில், வரைவு மதிப்புகளுக்கு ஏதேனும் திருத்தம் தேவைப்பட்டால், அதனை சரி செய்து மீண்டும், பொது மக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்க வாய்ப்பளித்து, அதன் பின்னர் வழிகாட்டி மதிப்புகள் இறுதியாக்கப்பட்டன. இவ்வாறு தயாரிக்கப்பட்ட வழிகாட்டி மதிப்புகள் 1.4.2012 முதல் அமல்படுத்தப்பட்டன.

வழிகாட்டி மதிப்புகளைச் செம்மையாகத் தயாரிக்கத் தேவையான, அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மேலும் வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயிக்கும் குழுக்களில், சம்மந்தப்பட்ட அனைத்துத் துறைகளின், பிரதிநிதிகளின் பங்கேற்பும் இருக்குமாறு அமைக்கப்பட்டது. இதனால் வழிகாட்டி மதிப்புகளைத் தயாரிக்கும் பணியில், பதிவுத் துறை மட்டுமல்லாமல், தொடர்புடைய துறைகள் அனைத்தின் பங்களிப்பும் இருந்தது.

மாநிலம் முழுவதுமுள்ள 4 கோடி சர்வே எண்களுக்கும், 2 இலட்சம் தெருக்களுக்கும் மதிப்பு நிர்ணயம் செய்யப்படும் போது, சில முரண்பாடுகள் ஏற்படுவது இயல்பான ஒன்றாகும். அத்தகைய முரண்பாடுகள் ஏதேனும் பொது

மக்களால் துறையின், கவனத்திற்குக் கொண்டு வரப்படும் போது, உரிய பரிசீலனைக்குப் பின், இந்த முரண்பாடுகளைக் களைய, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான, துணை மதிப்பீட்டுக் குழுக்கள், உரிய கருத்துருக்களைப், பதிவுத் துறைத் தலைவர் தலைமையிலான, மாநில அளவிலான மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பி அவற்றை சரி செய்கின்றன. இவ்வாறு மாவட்ட துணை மதிப்பீட்டுக் குழுக்களால், அனுப்பப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில், மாநில அளவிலான மதிப்பீட்டுக் குழுவினால், இதுவரை 20,704 சர்வே எண்கள் மற்றும் 258 கிராமங்கள் தொடர்பான முரண்பாடுகள் களையப்பட்டுள்ளன.

இதன் பின்னரும், வழிகாட்டி மதிப்புகளை ஆவணதாரர் ஏற்க மறுக்கும் பட்சத்தில், இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏ வின்படி, ஆவணத்தைப் பதிவு செய்த பின், சொத்தின் சந்தை மதிப்பு மற்றும் செலுத்தத்தக்க முத்திரைத் தீர்வை ஆகியவற்றை நிர்ணயம் செய்ய மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரை) / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) ஆகியோருக்கு அனுப்ப வழிவகை உள்ளது. வழிகாட்டி மதிப்புகள் 1.4.2012ல் திருத்தியமைக்கப்பட்ட பின், 31.3.2013 வரை 21,320 ஆவணங்கள் இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏ வின் கீழ், நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன. வழிகாட்டி மதிப்புகளை, நிர்ணயம் செய்யும் நடைமுறையை மேலும், செம்மைப்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, துறை அலுவலர்களால் பல்வேறு தொடர்புடைய தரப்பினருடன் ஆலோசனை நடத்தியும், அண்டை மாநிலங்களில் வழிகாட்டி மதிப்புகளை நிர்ணயம்

செய்யும் நடைமுறை குறித்து அறிந்து கொண்டும், சிறந்த நடைமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஏழை எளிய மக்களுக்கு, முத்திரை கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் விலக்கு பெறுவதற்கு, சொத்தின் மதிப்பு ரூ.5000 என்று இருந்த உச்சவரம்பை ரூ.25000 என்று 05.07.2012 முதல் உயர்த்தி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் பிறகு 31.03.2013 வரை சுமார் 13,000 ஆவணங்கள், இந்த சலுகையை பெற்று, பதிவு செய்யப்பட்டுள்ளன, என்று இந்த பெருமிகு அவையில் பதிவு செய்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மக்கள் நலனில் அக்கறை இல்லாத, எதிர் காலதிட்டங்களில் தொலைநோக்கு பார்வையில்லாத, செயலற்ற மைனாரிட்டி திமுக அரசின் கையாலாகாத்தனத்தின் விளைவாக, உருவாக்கப்பட்ட மின் வெட்டின் காரணமாக, அல்லல் உறும் தமிழகத்தினை, மீண்டும் மின் மிகு மாநிலமாக உருவாக்க, அரும்பாடுபட்டு வரும் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின், முனைப்பான செயலுக்கு உறுதுணையாக இருக்கும் வகையில், ரூ.4.91 கோடியில் 167 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு, மின்னாக்கிகள் (Generators) வழங்கப்பட உள்ளது என்பதையும் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பதிவுத்துறையின் செயல்பாட்டில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த இணையதள அடிப்படையிலான, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, என்பது இன்றியமையாததாக உள்ளது. பதிவுத்துறை அலுவலகங்கள், அனைத்தையும், இணையதளம் மூலம் ஒன்றிணைக்கவும், தற்போது துறையால் சேமித்து வைக்கப்பட்டுள்ள, தகவல் தொகுப்புகளை பெயர்ச்சி செய்யவும் (Data Transfer), துறையின் செயல்பாடுகளை தொலைநோக்கு பார்வையுடன் வரும் 50 ஆண்டுகால தேவையை, மனதில் கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள், துறையை முற்றிலுமாக (End to End Computerisation), கணினிமயமாக்க 117.34 கோடி வழங்கி, ஆணை பிறப்பித்துள்ளார்கள் இத்திட்டம், ஒரு வருடத்திற்குள் செயல்படுத்தப்படும். இதன்மூலம் இந்திய அளவில், பதிவுத்துறையின் அனைத்து பணிகளும், கணினிமயமாக்கப்பட்ட ஒரே மாநிலம், முதல் மாநிலம், தமிழகம்தான், என்ற நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அடையும், என்பதனை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

பிரெஞ்சு நாட்டு பேரறிஞர் எமிலா ஜோலா இரவெல்லாம் கண்விழித்து, எழுதிக் கொண்டே இருப்பாராம்!

அப்போது நள்ளிரவில் தன் வீட்டு மாடியில் நின்று கொண்டு, பிரெஞ்சு தேசமே, நீ தூங்கிக் கொண்டிருக்கிறாய். உனக்காக நான் விழித்துக் கொண்டிருக்கிறேன்

என்று உரக்கச் சொன்னவாறே பிரெஞ்சு தேசத்தின் எழுச்சிக்காக தன் எழுத்துப் பணியைத் தொடர்வாராம்.

அதுபோலத்தான், விடிவு எனும் மலர் பூத்துச் செழிக்க வெற்றி மகள் தமிழ் மண்ணில் நிரந்தரமாய் குலுங்கி சிரிக்க,

கொடுமதியரும், கெடுமதியரும் நிரந்தரமாய் மரிக்க,

மக்கள் வாழ்வில் மாற்றம் பிறக்க,

மானுடச் சமூகம் இன்னும் இன்னும் சிறக்க,

சாதனைத்தாய் ஆளும் மண்ணிலிருந்து
சாதிவெறியும், மதவெறியும் அடியோடு துறக்க

தூங்காத விழிகள் கொண்டு, துறுதுறுத்த பணிகள் கொண்டு,

உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து,

தமிழகம் அனைத்துத் துறைகளிலும்
இந்திய தேசத்தில் இணையில்லா மாநிலம் என்னும்
முன்னிலை பெற்றுச் சிறக்க,

உழைத்து உழைத்தே உலகம் வியக்கும்
வரலாறு படைத்திடும் அன்னையே!
you are "The Legend",

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

"Legend" என்கிற ஆங்கில வார்த்தையை பற்றிய சில குறிப்புகளை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

"Legend", for its active and passive participants includes no happenings that are outside the realm of "Possibility", defined by a highly flexible set of parameters, which may include miracles (A highly improbable or extraordinary events, development, or accomplishment) that are

perceived as actually having happened, within the specific tradition of indoctrination, where the legend arises.

Here the Legend arised is **AMMA.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஒரு சில வாழ்ந்த, வாழ்கின்ற Legend-களை பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

Mahatma Ghandhi is the legend of Indian freedom,

Mother Theresa is the legend of social service,

Subramaniya bharathi and

Rabindranath Tagore are the Poetic Legends

Pele and Maradona are the legends of Foot ball,

Sachin tendulkar, Don Bradman are legends of Cricket,

Roger Federer and Bjorn Borg are legends of Tennis,

So, like wise,

**AMMA** you are the **living legend** of

Tamil Nadu Politics today,

and you will be the living legend of

**Indian Politics** tomorrow

என்று சொல்லி உங்களின் சாதனை அத்தியாயத்தை வாசிக்கவும், சுவாசிக்கவும் என் போன்ற எளியவனுக்கும் வாய்ப்புத் தந்தமைக்காக, நான் வாழும் காலமெல்லாம் நன்றி உரைத்துக் கொண்டே இருப்பேன் என்பதை சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒப்புதலோடு அறிவிப்புகளை வெளியிட விழைகிறேன்.

<u>அறிவிப்புகள்</u>

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட வினாக்கள் மற்றும் வெட்டுத்தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டிருந்த அனைத்து அம்சங்களுக்கும் இங்கே தெளிவாக விடை அளிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட, அரசால் நிறைவேற்றப்பட வாய்ப்புகள் உள்ள கோரிக்கைகள் அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று தங்கள் வாயிலாக தெரிவித்துக் கொள்ள கடமை பட்டுள்ளேன். எனவே, அனைத்து வெட்டுத்தீர்மானங்களையும் திரும்ப பெற்றுக்கொண்டு வணிகவரி மற்றும் பதிவுத்துறைகளின் மானியக் கோரிக்கைளை நிறைவேற்றித்தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.